Written by - வ.ந.கிரிதரன் -
Thursday, 27 December 2018 09:04 - Last Updated Thursday, 27 December 2018 20:26

அண்மையில் எழுத்தாளர் ஜெயமோகனின் வலைப்பதிவில் கண்ட கேள்வி பதிலொன்று என் கவனத்தைக் கவர்ந்தது. கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் இலக்கணம் பற்றியும், அவ்வப்போது இலக்கணம் மீறப்படுவது பற்றியும், பின்னர் இவ்விதம் மீறப்பட்டவற்றை இலக்கணம் உள் வாங்குவதும் பற்றிய தன் எண்ணங்களை ஜெயமோகன் மிகவும் எளிமையாக ஆனால் தர்க்கச் சிறப்புடன் எடுத்துரைத்திருக்கின்றார். அதனை நண்பர்களுடன் பகிர்ந்துகொள்கின்றேன்.

[illegible] – 60 [illegible]

[illegible]? - [illegible]. -



[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]!



ஜெயகாந்தனின் ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம் தொடர்நாவலில் சம்பவங்களுக்கு உயிர்த்துடிப்புடன் ஓவியர் கோபுலு சித்திரங்கள் வரைந்திருப்பார். ஆனந்த விகடனில் நாவல் தொடராக வெளிவந்தபோது நாவலில் வரும் ஒரு காட்சியும், அதற்கு கோபுலு வரைந்திருந்த ஓவியமும் பசுமரத்தாணி போல் ஆழ் மனத்தில் சென்று படிந்துவிட்டது. மானுட உளவியலைப் பிரதிபலிக்கும் ஜெயகாந்தனின் வசனங்களுக்கு உயிரூட்டியிருந்தார் கோபுலு. காலச்சுவடு பதிப்பகத்தினர் ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம் நாவலை வெளியிட்டபோது ஆனந்த விகடனில் தொடராக வெளிவந்த ஓவியங்களுடன் வெளியிட்டிருந்தார்கள். அந்நூல் என்னிடமுள்ளது. அவ்வப்போது அந்நாவலில் அப்பக்கத்தைப் புரட்டிப் பார்ப்பேன். மனத்தின் இறுக்கம் நெகிழ்ந்து இன்பத்திலாழ்ந்துவிடும். ஜெயகாந்தனின் வசனங்களையும், கோபுலுவின் அவ்வோவியத்தையும் நண்பர்களுடன் பகிர்ந்துகொள்கின்றேன்.

இதழ்களில் தொடர்களாக வெளிவந்த நாவல்களை வெளியிடும் பதிப்பகங்கள் அத்தொடர்களில் வெளிவந்த ஓவியங்களையும் உள்ளடக்கி வெளியிடுவது சிறப்பு மிக்கதென்பதென் எண்ணம். இதுபோல் முல்லை பதிப்பகத்தினர் வெளியிட்ட விந்தனின் பாலும் பாவையும் நாவலிலும் அந்நாவல் தொடராக வெளிவந்த ஓவியங்களுடன் வெளியிட்டிருக்கின்றார்கள். அந்நூலும் என்னிடமுள்ளது. ஆனந்தவிகடன் வெளியிட்ட பொன்னியின் செல்வன் நாவலிலும் ஓவியர் மணியத்தின் ஓவியங்களையும் உள்ளடக்கியிருந்தார்கள் என்பதும் இத்தருணத்தில் நினைவு கூரத்தக்கது.

-- "[illegible]

[illegible]

[illegible]

[illegible]" --

இவ்விதமானதொரு காட்சியைச் சித்திரிக்கும் எழுத்தாளனுக்கு மானுட உளவியல் புரிந்திருக்க வேண்டும். அவன் மானுடர் வாழ்வை நன்கு அவதானித்திருக்க வேண்டும்.